www.Padasalai.Net www.CBSEtips.in

V10T

**விருதுநகர் மாவட்டம்**

**இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023**

-----

## வகுப்பு 10

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ............
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

2) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ............
அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

3) ............ ஓர் அதிசயத் திறவுகோல்.
அ) வாய் ஆ) நாக்கு இ) மூக்கு ஈ) கண்

4) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இரும்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ............
அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

5) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ............
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

6) இருவர் உரையாடுவது போன்ற ஓசை ............
அ) தூங்கல் ஓசை ஆ) துள்ளல் ஓசை
இ) அகவல் ஓசை ஈ) செப்பல் ஓசை

**"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"**

7) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) மெய்க்கீர்த்தி இ) ஞானம் ஈ) காலக்கணிதம்

8) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
அ) பகர்வனர் - பருத்தி ஆ) ஆரமும் - அகிலும்
இ) பகர்வனர் - பட்டினும் ஈ) பருத்து - நூலினும்

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

9) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
10) காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
11) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
12) சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர் யார்? அவரைப் பற்றிக் கூறுக.
13) **குறிப்பு வரைக:** அவையம்

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

14) **மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக:**
அ) மனக்கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்

15) **அகராதியில் காண்க:**
அ) துரிஞ்சில் ஆ) மதுரகவி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

16) **சொல்லைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக:** பலகையொலி

17) **கலைச்சொல் அறிக:** அ) Belief - ஆ) Document -

18) **தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக:**
முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள்.

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **4×3=12**
**(குறிப்பு: 24 ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

19) ''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

20) வாளித் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

21) 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

22) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

23) **கீழ்க்காணும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக:**
''குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை''

24) **அடிபிறழாமல் எழுதுக:**
''மாற்றம் .........'' எனத் தொடங்கும் 'காலக்கணிதம்' பாடல்.

**V. விடையளி:** **2×5=10**

25) அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாழ்க்கையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் பற்றி ஐந்திணை எழுதுக.

26) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**VI. விடையளி:** **1×8=8**

27) அ) இராமானுசர் நாடகத்தினை சுருக்கிக் கதையாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com